# KARPAGAM ACADEMY OF HIGHER EDUCATION

Deemed to be University

(Established Under Section 3 of UGC Act 1956)

Eachanari Post,Pollachi Main Road,Coimbatore -641021

## M.Sc.APPLIED ASTROLOGY COURSE (2016-2017)

REGULATION 2016

COURSE OF STUDY AND SCHEME OF EXAMINATION

&

SYLLABUS

# DEPARTMENT OF ASTROLOGY
# FACULTY OF ARTS, SCIENCE AND HUMANITIES
# PG PROGRAMME CBCS M.Sc APPLIED ASTROLOGY

| Course Code | Name of the Course | Objectives & Out Comes | | Instruction hours / week | | | Credit(s) | Mamimum Marks | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | PEOs | POs | L | T | P | | CIA | ESE | TOTAL |
| **SEMESTER - I** | | | | | | | | | | |
| **16ASP101** | அடிப்படை ஜோதிடவியல் - I<br>Fundamentals of Astrology-I | **1** | **1** | **4** | **0** | **0** | **4** | **40** | **60** | **100** |
| **16ASP102** | ஜோதிடவியலில் கோள்கள் - I<br>Planets in Astrology-I | **1** | **1,8** | **4** | **0** | **0** | **4** | **40** | **60** | **100** |
| **16ASP103** | பிரஸன்ன ஜோதிட முறைகள் - I<br>Horary Astrological methods I | **3** | **5** | **4** | **0** | **0** | **4** | **40** | **60** | **100** |
| **16ASP104** | ராசிகள் பாவகங்கள் நட்சத்திரங்கள்-I<br>Rasi – Bhava – Star Constelations -I | **1** | **2** | **4** | **0** | **0** | **4** | **40** | **60** | **100** |
| **16ASP105B** | அடிப்படை வாஸ்து – 1<br>Fundamental Vasthu -I | **2** | **4** | **4** | **0** | **0** | **4** | **40** | **60** | **100** |
| **16ASP111** | பலன் சொல்லும் முறைகள் - I<br>Predictive methods in Astrology-I | **1,2** | **4,10** | **0** | **0** | **4** | **2** | **40** | **60** | **100** |
| **16ASP112** | Practical - I | **1,2** | **11** | **0** | **0** | **4** | **2** | **40** | **60** | **100** |
| | **Total** | | | | | | **24** | **280** | **420** | **700** |
| **SEMESTER II** | | | | | | | | | | |
| **16ASP201** | அடிப்படை ஜோதிடவியல் -II<br>Fundamentals of Astrology-II | **1** | **1** | **4** | **0** | **0** | **4** | **40** | **60** | **100** |
| **16ASP202** | ஜோதிடவியலில் கோள்கள் -II<br>Planets in Astrology-II | **1** | **1** | **4** | **0** | **0** | **4** | **40** | **60** | **100** |
| **16ASP203** | பிரஸன்ன ஜோதிட முறைகள் - II<br>Horary Astrological methods-II | **2** | **5** | **4** | **0** | **0** | **4** | **40** | **60** | **100** |
| **16ASP204** | ராசிகள் பாவகங்கள் நட்சத்திரங்கள்II<br>Rasi – Bhava – Star Constelations-II | **1** | **2** | **4** | **0** | **0** | **4** | **40** | **60** | **100** |
| **16ASP205B** | Modern vasthu II | **2** | **4** | **4** | **0** | **0** | **4** | **40** | **60** | **100** |
| **16ASP211** | பலன் சொல்லும் முறைகள் - II<br>Predictive methods in Astrology-II | **2** | **2,6** | **0** | **0** | **4** | **2** | **40** | **60** | **100** |
| **16ASP212** | Prediction - II | **3** | **6,11** | **4** | **0** | **4** | **2** | **40** | **60** | **100** |
| | **Total** | | | | | | **24** | **280** | **420** | **700** |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **SEMESTER III** | | | | | | | | | | |
| **16ASP301** | புதிய ஜோதிட முறைகள் Modern Astrological Methods | **2** | **3,6** | **4** | **0** | **0** | **4** | **40** | **60** | |
| **16ASP302** | ஜோதிடவிதிகளில் முகூர்த்தங்கள் - Muhurtha in Astrology | **3** | **7** | **4** | **0** | **0** | **4** | **40** | **60** | **100** |
| **16ASP303** | மருத்துவ ஜோதிடம் Medical Astrology | **3** | **8** | **4** | **0** | **0** | **4** | **40** | **60** | **100** |
| **16ASP304** | ஜோதிட கணித முறைகள் Casting Horoscope | **1** | **9** | **4** | **0** | **0** | **4** | **40** | **60** | **100** |
| **16ASP305** | Dasabukthi Predictions | **1** | **11** | **4** | **0** | **0** | **4** | **40** | **60** | **100** |
| **16ASP306B** | Ashtavargam | **2** | **10** | **4** | **0** | **0** | **4** | **40** | **60** | **100** |
| **16ASP312** | Practical - III | **1,8** | **11** | **0** | **0** | **4** | **4** | **40** | **60** | **100** |
| | | | | | | | **28** | **280** | **420** | **700** |
| **SEMESTER IV** | | | | | | | | | | |
| **16ASP491** | Project | **2.3** | **2,11** | **0** | **0** | **0** | **15** | **80** | **120** | **200** |

The following are the Elective papers

| **List of Elective Papers** | | |
|---|---|---|
| S.No | Course Code | Subjects |
| 1. | 16ASP105(A) | எண்கணிதம் (Numerology) |
| 2. | 16ASP105(B) | ஆடிப்படை வாஸ்த்து – I (Fundamentals of Vasthu – I) |
| 3. | 16ASP105(C) | அங்கலட்சனம் மற்றும் மச்சங்கள் (Samuthrika Lakshanam) |
| 4. | 16ASP205(A) | நவரத்தினங்கள் (Gemology) |
| 5. | 16ASP205(B) | நவீன வாஸ்த்து – II (Modern Vasthu – II) |
| 6. | 16ASP205(C) | கைரேகை சாஸ்திரம் (Palmistry ) |
| 7. | 16ASP306(A) | தாஜிகம் (Thajigam) |
| 8. | 16ASP306(B) | அஷ்டவர்க்கம் (Astavargam) |
| 9. | 16ASP306(C) | 16 வர்க்க சக்கரங்களும் பலன்களும் (Predictions through 16 Varga Chakras) |

## Programme outcomes

1) சோதிட முதுகலை மாணவர்கள் வானவியல் பற்றிய, சோதிடவியல் பற்றிய வரலாற்றை அறிவதால் இத்துறையின் பழமையையும் பெருமையையும் புரிந்து கொள்வார்கள்
2) சோதிடவியலின் அடிப்படைத்தன்மைகள் இராசி காரகத்துவங்கள், கோள்களின் காரகத்துவங்கள், பாவக காரகத்துவங்கள் ஆகியவற்றை பற்றிய ஆழ்ந்த அறிவு சாதக பலன்கள் நிர்ணயிப்பத்தில் முக்கிய பங்கு வகிக்கும்.
3) சோதிடவியலுக்கு பெரும் புகழ் சேர்த்த சோதிட அறிஞர்களின் பலன் கூறும் முறைகளை தெரிந்து கொள்வதினால் இத்துறையில் பல சாதனைகள் பல செய்ய ஆர்வம் ஏற்படும்
4) எண்கணிதம், வாஸ்து, கைரேகை, நவரத்தினங்கள், அங்கலட்சணங்கள் ஆகிய துணைப்பாடங்களுக்கு சோதிடவியலே ஆதாரம் என்பது புலப்படும்.
5) சாதகம் இல்லாதவர்களுக்கு பலன்கள் சொல்லும் வகையில் பிரசன்ன முறைகள் மூலம் பலன்கள் அறிந்து கொள்ளலாம்.
6) நாடி முறை, ஜெயமினி முறை, கிருஷ்ணமூர்த்தி பத்ததி முறை, மேலைநாட்டு முறை ஆகிய முறைகளில் பலன்கள் சொல்லப்படுவது சோதிட துறையின் வளர்ச்சிக்கு ஆதாரங்கள் ஆகும்.

7) நல்ல முகூர்த்தங்களில் ஆரம்பிக்கும் செயல்கள் நல்ல பலன்களைத் தரும், தீய முகூர்த்தங்களில் ஆரம்பிக்கப்படும் செயல்கள் துன்பத்தை விளைவிக்கும் என்பதை உணரமுடியும்.
8) மருத்துவ சோதிடத்தின் மூலம் நோய் ஏற்படும் உடல் பாவகம், நோயின் தன்மை, நோய் ஏற்படும் காலம், நோய் தீர்க்கும் முறைகள் ஆகியவற்றை தெளிவாக அறிய முடியும்.
9) சோதிட கணித முறைகளை அறிந்து கொள்வதின் மூலம் இக்கால விஞ்ஞானம், கணினி முதலியன அழிந்தாலும் சோதிட கணித முறைகள் அழியாமல் பாதுகாக்க முடியும்.
10) அஷ்டவர்க்கங்கள், தாஜிகம், பதினாறு வர்க்க சக்கரங்கள் பற்றிய அறிவு, சாதக பலன்களை சொல்லுவதில் துல்லியத்தை நிர்ணயிக்க உதவும்.
11) கல்வி, திருமணம், தொழில், புத்திரபேறு முதலியவை பற்றிய கேள்விகளுக்கு தெளிவான பலன்களை சொல்ல முடியும்.

## Programme Specific outcomes

12) தனிமனிதனின் பிரச்சனைகளுக்கு சோதிட ரீதியில் சரியான தீர்வை கொடுக்க முடியும்.
13) எதிர்காலத்தில் நடக்கக்கூடிய நன்மை, தீமைகளை முன் கூட்டியே அறிந்து, அதற்காக முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள முடியும்.
14) சோதிட சாஸ்திரம் தனிமனிதனின் வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் ஒரு வழிகாட்டியாக அமையும்.

## Programme Educational Objectives (PEOs)

PEO 1 : சோதிடவியல் முதுகலைப்பட்ட தாரிகளுக்கு வானவியல் அறிவு, சோதிடவியலின் வரலாறு, சோதிடவியலின் அடிப்படைத் தன்மைகள், கோள்கள், இராசிகள், பாவகங்கள் பற்றிய அறிவு உள்ளதால் கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ற வகையில் பலன்கள் கூறுவதற்கான திறமைகள் வளரும்.

PEO 2 : சாதக பலன்கள் சொல்லுவதற்கு சோதிட சாஸ்திரத்தில் பல முறைகள் உண்டு. அனைத்து முறைகளிலும் நன்கு பயிற்சி அளித்து, இத்துறையில் வலிமை உள்ளவர்களாக மாற்ற முடியும். இவர்கள் இத்துறையில் புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடிக்க முடியும். சோதிடத்தின் துணை சாஸ்த்திரங்களான கைரேகை, வாஸ்து, எண்கணிதம் முதலியவற்றிலும் அறிவு வளரும்.

PEO 3 : இது ஒரு தெய்வீக கலை என்பதால் சோதிட முதுகலை பட்டதாரிகள் ஒழுக்கத்தில் சிறந்தவர்களாகவும், சோதிட அறிவில் தன்னிகரற்றவர்களாகவும் மாற்றம் ஏற்படும். தற்காலத்தில் சமுதாயத்தில் ஏற்படும் அனைத்து தனி மனித பிரச்சனைகளுக்கும் தீர்வு காணமுடியும்.

| POs | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| PEO 1 | X | X | | | X | | X | | | | | | | |
| PEO 2 | | X | X | X | X | | | | X | X | X | | | X |
| PEO 3 | | | | | | X | X | X | | | X | X | X | X |

**KARPAGAM ACADEMY OF HIGHER EDUCATION**

**DEPARTMENT OF ASTROLOGY**

**Marks Allocation**

Continuous Internal Assessment (CIA):

The performance of students in each will be continuously assessed by the repective faculty as per the guidelines given below:

Theory Courses

| S.No | Category | Maximum Marks |
|---|---|---|
| 1. | Attendance | 5 |
| 2. | Test-I# | 10 |
| 3. | Test-II# | 10 |
| 4. | Journal Paper Analysis & Presentation | 15 |
| Continuous Internal Assessment : Total | | 40 |

- The Mark obtained in the seminar should be entered in automation software on or before 60th working day of the semester.
- # Test answer scripts in should be evaluated and marks awarded should be entered in automation software on or before 4th working day after the last date

Practical Courses (Astrology):

| S.No | Category | Maximum Marks |
|---|---|---|
| 1. | Attendance | 5 |
| 2. | Observation Work | 5 |
| 3 | Record Work | 5 |
| 4. | Model Examination (Related with astrology) | 15 |
| 5. | Viva –Voce [Comprehensive] | 10 |
| Continuous Internal Assessment : Total | | 40 |

- Includes Viva-voce Conducted during every regular practical class and the model exam practical.
  Every practical exercise/experiment and records should be maintained.

UNIVERSITY EXAMINATIONS

End Semester Examination(ESE): ESE will be held at the end of each semester for each course.The question paper is for a maximum of 60 marks.

Pattern of ESE Question Paper:

| Instruction | Remarks |
|---|---|
| Maximum Marks | 60 marks for all Semester Examination |
| Duration | 3 Hours |
| Part –A | 10 out of 15 two mark Questions (10x2=20 Marks)<br>(Not exceeding 3 questions from each unit) |
| Part-B | 5 Eight mark Questions(5x8=40 Marks)<br>• One Question from any one of the units is compulsory. It shall be oriented to analysis/design/application/case studies.<br>• 4 Questions are in 'either –or' choice.<br>• (One Question each from the remaining 4 units) |

Admission eligibility: Any degree passed in a recognized university

----------------------

| 16ASP101 | Fundamentals of Astrology – 1 | Semester – I<br>4H – 4C |
|---|---|---|

Instruction Hours / Week: L : 4 T : 0 P : 0 Marks Internal : 40, External : 60 Total : 100
End Semester Exam : 3 hrs

**நோக்கங்கள் :**

1) ஜோதிடத்தின் தோற்றம் எந்த நாட்டில் ஏற்பட்டது என்பதில் தெளிவு உண்டாகும்.

2) வானசாஸ்த்திர வளர்ச்சியை வரலாற்று ரீதியாகக் கற்றுக் கொள்வதால் ஆய்வு மனபான்மை உண்டாகும்.

3) இந்திய ஜோதிடத்தை அறிந்து கொள்வதால் இந்தியர்களின் ஜோதிடத்திறமை எவ்வாறு இருந்துள்ளது என்று உணரலாம்.

4) வேதாங்க ஜோதிடம், அதர்வன ஜோதிடம் ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை தெரிந்துக் கொள்ளலாம்.

5) அயல் நாட்டு ஜோதிடவியலின் வரலாற்றை தெரிந்துக் கொள்வது.

6) நாஸ்ட்ரடாமஸ் போன்ற தீர்க்க தரிசிகளை பற்றி தெரிந்துக் கொள்வது.

**பயன்கள்**

1) இந்திய ஜோதிடத்தின் வரலாற்றை அறிந்து கொள்வதால் நமது கலாச்சாரத்தின் தொன்மையை அறியலாம்.

2) இந்தியர்களின் வானசாஸ்த்திர புலமை, ஜோதிடவியல் புலமை ஆகியவற்றை அறிந்துக் கொள்வதால் ஆய்வு மேற்படிப்புகளில் பயனுள்ள முடிவுகளை எடுக்க முடியும்.

3) ஜாதகத்தை கணிப்பதற்கு பஞ்சாங்க நூல் வேண்டும், பஞ்சாங்க நூல்கள் வானசாஸ்த்திரத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவைகளாகும்: எனவே பஞ்சாங்க நூல்கள் யாரால் எப்படி உருவாக்கப்பட்டவை என்ற அறிவு அவசியமாகிறது.

4) பராசரர் போன்ற ரிஷிகளின் பெருமைகள் நமக்கு புரியும்.

5) வேதங்கள், புராணங்கள், இதிகாசங்களின் பெருமை புரியும்.

6) இந்திய ஜோதிட வரலாற்றை அயல் நாட்டு ஜோதிட வரலாற்றோடு ஒப்பு நோக்க முடியும்.

**UNITS:**

**1. வானியலும் ஜோதிடமும்**
வானசாஸ்திரம் - கோள்களின் அமைப்புக்கள்
சூரிய குடும்பம் - பூ கோளமும் வான் கோளமும்

**2. ஜோதிடத்துடன் தொடர்புகள்**
பூமியின் இயக்கமும் ஜோதிடமும். இராசி சக்கரம் என்னும் மகா அற்புதம். இராசி மண்டலமும், நட்சத்திரப் பிரிவுகளும்.

**3. ஜோதிட வரலாறு - பாபிலோனியா - எகிப்து – கிரேக்கம்**

ஈரல் ஜோதிடம் - ஜோதிடவியலின் தோற்றம் - வானவியல் ஜோதிடம் - பூவுலகில் கோள்களின் தாக்கம் தனிமனித ஜாதகம் - சகுனங்கள்.

4. **மேலை நாடுகளின் சோதிட வரலாறு**

சுமேரியர் - மெசபதோமியர் - பாபிலோனியா – சால்தியா. எகிப்து – கிரேக்கம் - வானசாஸ்திர மறுமலர்ச்சி – நிக்கோலஸ் கோபர் நிகஸ் - கலிலியே கலில் - ஜொகன்னஸ் கெப்ளர் - ஐசக் நியூட்டன்.

**5. ஜோதிட வரலாறு - இந்தியா**

வேதாங்க ஜோதிடம் - வேதகால மாதங்கள் - வேதகால திதிகள் - முகூர்த்தங்கள் - பதினெட்டு சித்தாந்தங்கள் - இந்திய வானசாஸ்த்திர அறிஞர்கள். வராகமிகிரார்.

**குறிப்புதவி நூல்கள்**


| | | |
|---|---|---|
| 1. | Hindu Astrology and the West | B.V.Raman. |
| 2. | கிருக்ஷ்ணமூர்த்தி பத்ததி முறை | K.S. கிருஷ்ணமூர்த்தி |
| 3. | வானசாஸ்திரம் | M.L. ராஜா |
| 4. | வானியலும் ஜோதிடமும் | M.K. தாமோதரன் |
| 5. | Ancient Hindu Astrology for the Modern Western Astrologer (1986) | James T.Braha |

16ASP102 Planets in Astrology – 1 Semester – I
4H – 4C

Instruction Hours / Week: L : 4 T : 0 P : 0 Marks Internal : 40, External : 60 Total : 100
End Semester Exam : 3 hrs

**நோக்கங்கள்**

1) கோள்களின் வடிவங்கள், நிறங்கள், குணங்கள், தன்மைகள் இவைகளை தெரிந்துக் கொள்வது அவசியமாகும்.

2) கோள்கள் குறிப்பிடும் உடல் உறுப்புக்கள் மற்றும் நோய்கள் பலன்கள் கூறுவதில் முக்கிய பங்குவகிக்கின்றன.

3) கோள்கள் குறிப்பிடும் தொழிகள் எவை என்பதை தெரிந்துக் கொண்டு, ஜாதகர்களை சரியான வழியில் வழிகாட்ட முடியும்.

4) நாம் கூறும் பலன்கள் எக்காலகட்டத்தில் நடைபெறும் என்பதை அறிய தசா, புத்தி, கோசாரம் பற்றிய அறிவு நமக்கு தேவைப்படுகிறது.

5) கோள்களின் இணைவு மூலம் ஜாதகரின் வாழ்க்கையில் ஏற்படும் பலன்களை அறிவது.

6) கோள்களின் காரகத்துவங்கள் பார்வைகள் மூலம் ஜாதக பலன்களை மிக துல்லியமாக கணிக்க முடியும்.

**பயன்கள்**

1) ஜாதக பலன்கள் நிர்ணயிப்பதில் கோள்களின் காரகத்துவங்களுக்கு முக்கிய பங்குண்டு.

2) கோள்களின் தன்மைகள், குணங்களின் அடிப்படையில் ஜாதகங்களின் தன்மையும், குணங்களும் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லாமல் பலன்கள் கூறமுடியும்.

3) கோள்கள் குறிப்பிடும் உடல் உறுப்புகளில் மிக துல்லியமாக நோய்களை கணித்து கூறமுடியும்.

4) கோள்களின் சேர்க்கையை கொண்டு விதவிதமான தொழில்களை ஜாதகர்களுக்கு சுட்டி காட்ட முடியும். தசா, புத்தி, கோசத்தை கொண்டு நிகழ்ச்சிகள் நடக்கும் காலத்தை நிர்ணயிக்கலாம்.

5) கோள்களின் பலத்தைக் கொண்டு ஜாதக பலன்களை முடிவு செய்ய முடியும்.

6) 2,10க்கு அதிபதியான கோள்களை கொண்டு ஜாதகர் எந்த தொழில் மூலம் பணம் சம்பாதிப்பார் என்பதை அறிய முடியும்.

**UNITS**

**1. கோள்களின் குணங்கள்**

கோள்கள் - வடிவங்கள் - நிறங்கள் - இருப்பிடம் - கோள்களின் உருவம் - பாலினம் - சமித்து – திக்கு, மலர் - ரத்தினம் - தானியம் - உலோகம் - சுவை நீச்ச ராசி - மூலத்திரிகோண ராசிகளட – உச்ச ராசிகள் - கோள்களின் நட்சத்திரங்கள்.

2. **கோள்களின் காரகங்கள்**

குணங்கள் - தன்மைகள் - கோள்கள் குறிக்கும் இடங்கள் - வீட்டு உபயோக பொருட்கள் - உறவுகள் - விலங்கினங்கள் - மரங்கள் - மனிதர்களின் குணாதிசயங்கள் - பஞ்சபூத தன்மை – நவரத்தினங்கள்.

**3. கோள்கள் குறிப்பிடும் உடல் உறுப்புக்கள் மற்றும் நோய்கள்.**
காலபுருஷ ராசியும் -உடல் உறுப்புக்களும - கோள்கள் சுட்டும் உடல் பாகங்கள்- நோய்கள் - முக அவயங்கள் - உடலின் உட்புற உறுப்புகள்.

**4. கோள்கள் குறிப்பிடும் தொழில்கள்**
பத்தாம் பாவமும் தொழில்களும் - பத்தாம் பாவத்தில் நின்ற கோள்கள் - சுட்டும் தொழில்கள் - பத்தாம் பாவக - நவாம்ச அதிபதி -குறிப்பிடும் தொழில்கள்- உதாரண ஜாதகங்களுடன் விளக்கம் - வேலைகள்

5. கோள்கள் குறிப்பிடும் திசாக்கள் - திசாக்களின் வகைகள் - திசா, புத்தி, அந்தரம் - **சூட்சமாகணிதம்** - தசாபுத்தி பலன்கள் . குறிப்பாக சனிதசா – சனி புத்தி தரும் பலன்கள் - ஏழரைநாட்டுசனி

**குறிப்பதவி நூல்கள்**


| | | |
|---|---|---|
| 1. | உத்திரகாலாமிருதம் | S.A.குமாரஸ்வாமி ஆச்சாரியார். |
| 2. | Prasana Marga | B.V.Raman |
| 3. | Pointer to Profession | T.P.Trivedi & R.Asthana |
| 4. | Brihat Parasara Hora Sastra | G.C.Sharma |
| 5. | ப்ருஹத் ஜாதகம் | C.G.ராஜன் |
| 6. | குடும்பஜோதிடம் | ஸ்ரீராமய்யங்கார்-ஸ்ரீஸ்ரீனிவாஸாசாரியார் |
| 7. | Mundane Astrology | B.V.Raman |
| 8. | ஜோதிடமும் நவகிரகங்களும் | முருகு இராசேந்திரன் |

16ASP103 Horary Astrological Methods – 1 Semester – I
4H – 4C

Instruction Hours / Week: L : 4 T : 0 P : 0 Marks Internal : 40, External : 60 Total : 100
End Semester Exam : 3 hrs

**நோக்கங்கள்**

1) ஜாதகம் இல்லாதவர்களுக்கு ஜாதக பலன்கள் சொல்வதற்காகவும், பிறப்பு ஜாதகத்தில் பிறந்த நேரம் சரியாக இல்லாத போது பலன்கள் மாறுவதை, பிரஸன்னம் தடுக்கும்.

2) பிரசன்ன ஜோதிடமுறையில் கேள்வியாளரின் நிலை, ஆடை தொடும் உறுப்பு முதலியவை கொண்டு பலன் அறியலாம்.

3) பலவகையான ஆருட லக்னங்கள் கண்டுபிடித்தல், சகுனம், நிமித்தங்கள், அஷ்டமங்கல பிரஸன்னம் ஆகியவற்றின் மூலம் ஜோதிடத்தின் ஆழத்தை புரிந்துக் கொள்ள முடியும்.

4) சகுனம், நிமித்தங்களின் மூலம் ஜாதகரின் கேள்விகளும் பதில் கூற முடியும்.

5) வெற்றிலை ஜோதிடம் மூலம் ஜாதகரின் கடந்த காலம், நிகழ்கால பலன்களை தெளிவாக கூற முடியும்.

6) அஷ்ட மங்கல பிரசன்னம் மூலம் ஜாதகரின் குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதில்கள் கூற முடியும்.

**பயன்கள்**

1) பலன்கள் கூறுவதில் மிக துல்லியத்தை கொடுப்பது பிரசன்ன ஜோதிடமாகும்.

2) பிறப்பு ஜாதகம் இல்லாமலும், கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியும்.

3) பிரஸன்னத்தின் மூலம் நம் முன்னோர்களின் நிலையையும், நம்முடைய பூர்வ கர்மங்களின் நன்மை, தீமைகளை பற்றிய தன்மையையும் தெளிவாக புரிந்துக் கொள்ளலாம்.

4) இப்பிறப்பில் செய்யப்பட்ட நல்வினை, தீவினை ஆகியவை பற்றியும் பிரஸன்னத்தின் மூலம் அறியலாம்.

5) அஷ்ட மங்கல பிரசன்னம் மூலம் கேள்வியாளர் பிரச்சினைகளை எளிதாக கண்டு பிடிக்க முடியும்.

6) விவாஹ பிரசன்னம், நஷ்ட பிரசன்னம், ஆயுள் பிரசன்னம், ரோக பிரசன்னம் மூலம் கேள்வியாளரின் கேள்விகளுக்கு பதில்கள் கூற முடியும்.

## UNITS

**1. பிரசன்னத்தில் ஜோதிடர் கேள்வியாளர் பங்கு.**
ஜோதிடருக்கான கோட்பாடுகள் - கேள்வியாளர் கொண்டுவரும் பொருட்கள் - கேள்வி கேட்பவர் நிற்கும் திசைகள் - தொடும் அங்கங்கள் - அதற்கான பலன்கள் - ஜோதிடரின் சுவாசம்.

**2. கேள்வியாளரின் நிலை- ஆடை மற்றும் லட்சணங்கள்.**
கால்களை எடுத்து வைத்தல் - கால்களை ஆட்டுதல் - தயக்கம் - மூன்றாம் நபர் கடந்து செல்லுதல் - கைகளை பிசைதல் - தன்னை அடித்துக் கொள்ளுதல் - மரண தொடர்பு கர்மங்கள்- நிற்கும் போது, உட்காரும் போது உள்ள நிலைகள்.

**3. பிரசன்னத்தில் லக்னம் நிர்ணயித்தல்**

ஆறு வித ஆருட லக்னங்கள் ஸ்வா்ணாருடம் - உதயாரூடம் - உதய வா்ன அம்ஸ ஆருடம் - சாத்திர ஆருடம் - அங்கஸ் பரஷ்ட ஆருடம் - சந்திர ராசி.

**4. பிரசன்ன வகைகள் - அகூஷ்டமங்கலம்**

தெய்வானுக்கிரகம் - குலதெய்வானுக்கிரகம் - பிதுா் சாபம் - மாதா் சாபம் - சா்ப்ப தோஷம் - வாக்தோஷம் - திருஷ்ட தோஷம் - சத்ரு தோஷம்- பிராமண தோஷம் - குரு, குருபத்னி சாபம் - விஷபோஜனம் - வாஸ்து தோஷம்.

5. **சோழிப்பிரசன்னம்-** தேங்காய்- ஆரூடம்- பலகரைசோதிடம் - பஞ்ச பட்சி முறை நட்சத்திரங்களுக்குரிய பட்சிகள் - பஞ்ச பட்சிகளின் தொழில் முறை, படுபட்சிபலன் **கூறும் முறைகள் ஆறு விதிகள்**

**குறிப்புதவி நூல்கள்**


1. Prasana marga(1999) — B.V.Raman
2. பிரசன்ன ஜோதிடம் (2006) — K.S. கிருஷ்ணமூா்த்தி
3. அஷ்டமங்கல தேவபிரசன்னம் (2011) — அ.அமிா்தலிங்கம்
4. சோழிப்பிரச்ன ஆருடம் — எம். நடராஜன்
5. Prasanna Tantra (2001) — B.V.Raman
6. பிரசன்ன ஆரூடம் — சுப. சுப்ரமணியன்
7. ஷட் பஞ்சாசிகா (2002) — எஸ்.ஏ.குமாரசாமி ஆச்சாாி

16ASP104 | Rasi – Bhava – Star Constellations- 1 | Semester – I
4H – 4C

Instruction Hours / Week: L : 4 T : 0 P : 0 | Marks Internal : 40, External : 60 Total : 100
End Semester Exam : 3 hrs

**நோக்கங்கள்**

1) பன்னிரு ராசிகளின் காரகத்துவங்களை தெரிந்துக் கொள்வதால் பலன்களை தெளிவாக முடிவு செய்ய முடியும்.
2) ராசிகளின் தன்மை, வடிவம், இருப்பிடம், மரங்கள், மிருகங்கள் என்பவை பலன் சொல்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.
3) பன்னிரு பாவகங்களின் காரகத்துவங்களும் தெளிவாக புரிந்துக் கொண்டால் மட்டுமே ஜாதகப் பலன்களை வரையறுத்து கூற முடியும்.
4) 27 நட்சத்திரங்களின் தன்மை, குணம், வடிவம் இவைகளும் பலன் கூறுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.
5) ராசியில் நிற்கும் கிரகம் பாவகத்தில் மாறி நின்றால் பலன்கள் மாறுவதை அறிய முடியும்.
6) பாவாதிபதிகள் மாறி நிற்பதால் ஏற்படும் ஜாதக பலன் மாற்றங்களை அறிவது.

**பயன்கள்**

1) சூர்யாதி, சந்திராதி, பஞ்ச மஹா புருஷ யோகங்கள் பற்றி தெரிந்துக் கொள்வதால் ஜாதகருக்கு எப்படிபட்ட யோகத்தின் அடிப்படையில் பலன்கள் நடைபெறும் என்பதை கூறமுடியும்.
2) கேள்வியாளர்களின் கேள்விக்கு ஏற்ற பதிலை சொல்வதற்கு மேஷம் முதல் மீனம் வரையுள்ள இராசிகளின் தன்மை மற்றும் காரகத்துவங்களும், 12 பாவகங்கள் எதை குறிப்பிடுகின்றன என்பனவற்றை பற்றிய அறிவு வேண்டும்.
3) கோள்கள் நிற்கின்ற நட்சத்திரங்களின் அடிப்படையில் பலன்கள் மாறுவதை காணமுடியும்.
4) ஒரு கோள் எந்த ராசியில், எந்த பாவகத்தில் எந்த நட்சத்திரத்தில் அமர்கின்றது என்பதை பொருத்து பலன்கள் சொல்ல முடியும்.
5) லக்னம், லக்னாதிபதி எந்த நட்சத்திரத்தில் நிற்கின்றதோ அதை பொருத்து ஜாதகரின் பலன்கள் நிர்ணயிக்க முடியும்.
6) கோள்களின் நிலை தெரியாமலேயே லக்னத்தை கொண்டு பலன்களை வரையறுக்க முடியும்.

**UNITS**

**1. பன்னிரு ராசிகள் காரகத்துவம்**

மேக்ஷம் முதல் மீனம் வரை பன்னிரு ராசிகளின் இருப்பிடம் -வடிவம் - சிறப்பு அம்சங்கள். பன்னிரு ராசிகளுக்கும் ஆதிபத்ய முறையில் பலன்கள். ஒவ்வொரு ராசியில் உள்ள நட்சத்திர அடிப்படையில் பயன்கள். ஒவ்வொரு ராசியிலும் ஆட்சி, உச்சம், நீச்சம் அடையும் கிரகங்களை கொண்டு பலன்கள்.

**2. பாவகங்களின் காரகத்துவம்**

பன்னிரு பாவகங்கள் குறிப்பிடும் நிலைகள். பன்னிரு பாவகங்கள் குறிக்கும் - உயிர்காரத்துவங்கள். உடல் உறுப்புகள் - நன்மை, தீமைகள். ஒவ்வொரு பாவகமும்

குறிப்பாக உணர்த்தும் காரத்துவங்கள். மறைவு ஸ்தனங்கள்- தனஸ்தானம் - லாபஸ்தானம் - களத்திர ஸ்தானம்.

3. **பல வகையான யோகங்கள் சூர்யாதி, சந்திராதி, பஞ்ச மஹா புருச யோகங்கள்**
பத்ரயோகம் - மாளவியா யோகம் - சச யோகம் - ஹம்சயோகம் - ருஷயோகம்.

**4. இருபத்தியேழு நட்சத்திரங்களின் அமைப்பு**
அசுவனி முதல் ரேவதி வரை இருபத்தியேழு நட்சத்திரங்களின் வடிவம்- நட்சத்திரங்கள் ராசியின் தன்மை, ராசி அதிபதியின் தன்மைக்கு ஏற்ற வகையில் பலன்கள் தரும் முறைகள்.

5. **இருபத்தியேழு நட்சத்திரங்களின் குணம் மற்றும் தன்மைகள்**

பாவாதிபதிகள் நட்சத்திரங்களில் நிற்பதால் ஏற்படும் பலன்கள். கோள்கள் நட்சத்திரங்களில் உச்ச நீச்சம் அடைவதால் ஏற்படும் பலன்கள்.

**குறிப்புதவி நூல்கள்.**


| | | |
|---|---|---|
| 1. | உத்திரகாலாமிர்தம் | S.A.குமாரஸ்வாமி ஆச்சாரியார் |
| 2. | பிருஹத் பராசரா ஹோரா சாஸ்த்திரா | G.C.Sharma |
| 3. | நட்சத்திர சிந்தாமணி I ,II, III | சரஸ்வதி மகால் நூலகம் தஞ்சாவூர் |
| 4. | Book of Natkshatras | Prash Trivdi |
| 5. | இருபத்தியேழு நட்சத்திரகோவில்கள் | K.P. வித்யாதரன் |

| 16ASP105 (A) | Numerology - 1 | Semester – I<br>4H – 4C |
|---|---|---|

Instruction Hours / Week: L : 4 T : 0 P : 0 Marks Internal : 40, External : 60 Total : 100
End Semester Exam : 3 hrs

**நோக்கங்கள்:**

1) எண் கணிதம் பற்றிய அடிப்படையான கருத்துக்களை தெரிந்துக் கொள்ள வேண்டும்.
2) 1 முதல் 9 வரையுள்ள எண்கள் எந்தெந்த கிரகங்களை குறிக்கின்றது என்ற அறிவை பெற வேண்டும்.
3) 1 முதல் 30 தேதிகளில் பிறந்தவர்கள் எப்படிபட்ட குணாதிசயங்களுடன் வாழ்கிறார்கள் என்பதை இந்த எண்கணித சாஸ்திரம் நமக்கு தெளிவாக விளக்கும்.
4) பிறவி எண், விதி எண், பெயர் எண்களின் கூட்டு தொகை இவைகளை கொண்டு பலன் கூறும் முறையை தெரிந்துக் கொள்ளலாம்.
5) எண் கணிதம், ஜோதிட சாஸ்திரம் ஆகிய இரண்டிற்கும் உள்ள தொடர்பை அறிதல்.
6) ஒருவரின் பெயரை கொண்டு வாழ்நாள் முழுவதும் பலன்களை அறிதல்.

**பயன்கள்:**

1) எண் கணித சாஸ்திரத்திற்கு ஜோதிட சாஸ்திரமே அடிப்படை என்ற கருத்தை தெளிவாக புரிந்துக் கொள்ளுதல்.
2) பெயர்களின் சப்தங்களுக்கு எவ்வளவு வலிமை உண்டு என்பதை உதாரணங்களின் மூலம் தெரிந்துக் கொள்ளலாம்.
3) விதி எண் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற இன்ப துன்பங்களை படம் பிடித்து காட்ட கூடியது.
4) எண் கணிதம் மூலம் பெயர் மாற்றம் செய்து ஜாதகர்களின் வாழ்க்கை துன்பங்களை நீங்குவது.
5) பெயரில் திருத்தங்கள் செய்வதன் மூலம் பல அறிய பலன்களை அடைய முடியும்.
6) ஜாதகர் பிறந்த தேதியையும், கூட்டு எண்ணையும் கொண்டு வாழ்நாள் பலன்கள் சொல்ல முடியும்.

**UNITS**

**1. எண்கணிதம் பற்றிய முக்கிய குறிப்பு, எண்களின் பொருள்**
எண்கள் குறிக்கும் கோள்கள் - ஆங்கில எழுத்துக்கள் எண்களின் குணதிசயங்கள். பெயர் வைக்கும் முறை பெயர்களின் எண்களி சுட்டு எண்.

**2. எண்களில் விளக்கங்கள் (எண்களின் ஆற்றல்)**
பெயர்களின் கூட்டு எண்களின் பலன்கள் - வாழ்வில் ஏற்றம் தரும் எண்கள், கஷ்டத்தை தரும் எண்கள் - உயர்வை தரும் எண்கள்.

**3. எண்களின் செயல்பாடு – எண் நிறம், தன்மை, அதிபதி**
1,2,3 ஆகிய எண்களை பிறவி எண்களாக கொண்டவர்களின் பலன்கள். பிறப்பு ஜாதகத்தை கொண்டு பெயர் அறியும் முறை.

**4. பிறவி எண், விதி எண் பெயர் என அறியும் முறை**

பிறவி எண், விதி எண் இரண்டையும் சேர்த்து பலன்கள் நிர்ணயம் முறைகள். ஒரு எண்ணுக்கு நன்மையும், தீமையும் ஏற்படுத்தும் எண்கள்.

**5. 9 கோள்களின் வக்கர எண்கள் பலவீன எண்கள்**

எண்கணித ஜோதிட˙ பரிகாரங்கள். நோய்கள் மற்றும் பல பிரச்சினைகளை தீர்க்கும் முறை. வாழ்வின் ஏற்ற தாழ்வுகளை மாற்றும் பெயர் மாற்றம்.

**குறிப்புதவி நூல்கள்**


1. அதிஷ்டவிஞ்ஞானம் — பண்டிட் ஸேதுராமன்
2. Lucky Numerology — Veejay Raj
3. எண்கணித ஜோதிடம் — ஸ்வாமி
4. எண் ஜோதிடம் — சிவராசா

16ASP105 (B) Fundamental Vasthu – 1 Semester – I
4H – 4C

Instruction Hours / Week: L : 4 T : 0 P : 0 Marks Internal : 40, External : 60 Total : 100
End Semester Exam : 3 hrs

**நோக்கங்கள் :**

1) வீடு கட்டுவதற்கும், கட்டிடம் கட்டுவதற்கும் நிலம் தேர்வு செய்தல் அவசியமாகும். இப்பாடப் பகுதியில் தெளிவாக தெரிந்துக் கொள்ளலாம்.
2) நிலத்தின் வடிவம், கோணங்கள், சல்லியம் கண்டு பிடித்தல் முதலியவை இடத்தை தேர்வு செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.
3) வீடு அல்லது கட்டிடம் கட்டுவதற்கு ஒவ்வொரு அளவுகளும் எவ்வளவு அளவு இருக்க வேண்டும் என்பதை பற்றிய அறிவும் இதன் மூலம் கிடைக்கும்.
4) ஜோதிட சாஸ்திரமே வாஸ்து சாஸ்திர அடிப்படையாகும்.
5) வீட்டில் ஒவ்வொரு அறையும் அமையக் கூடிய இடங்களை முடிவு செய்ய முடியும்.
6) அறைகள் அமைப்பு, ஜன்னல் அமைப்பு மூலம் பலன்கள் அறிய முடியும்.

**பயன்கள் :**

1) வீடுகள், கட்டிடங்கள் எந்த திசையை பார்த்த வண்ணம் இருக்க வேண்டும், தலைவாசல், பின்வாசல் ஆகியவற்றின் திசைகள் வீட்டில் தங்கியுள்ளவர்களுக்கு எவ்வித பலனை தரும் என்பதை இப்பாட பகுதியில் தெரிந்துக் கொள்ளலாம்.
2) வீட்டிற்குள் நடப்பதையும், நடக்க போவதையும் அக்கட்டிடத்தின் வாஸ்துவின் மூலம் தெரிந்துக் கொள்ள முடியம்.
3) வாஸ்து சாஸ்திரம் நமது தலை எழுத்தை மாற்றும் சக்தி படைத்தது.
4) ஆரோக்கியமான வாழ்விற்கு துணைபுரியும்
5) செல்வம் நிறைந்த வாழ்விற்கு துணைபுரியும்
6) கல்வி, ஒழுக்கம் நிறைந்த வாழ்விற்கு துணை புரியும்.

## UNITS

**1. நிலம் தேர்வு செய்தல்**

வாஸ்து என்பதன் பொருள் - நிலத்தின் தன்மை – நிறம் - மணம் - சுவை – அமைப்பு - வசிக்கதக்க விலக்கத்தக்க நிலம் சல்லியம். வாஸ்து புருஷனின் புராணகால வரலாறு. வீடுகட்ட சிறந்த மனைகள் - வீடுகட்ட விலக்கத்தக்க மனைகள்.

**2. நிலத்தின் வடிவம்**

நிலத்தின் வடிவம் - சதுரம் - செவ்வகம் - வட்டம் - முக்கோணம் - நீள் சதுரம் - சக்கரம் - கிண்ணம் பானை – பலவித கோணங்கள் - தன்மைகள் - மனைகளின் அமைப்பு – மனைகளின் வடிவங்களால் ஏற்படும் பலன்கள் - மனைகளின் வடிவத்தை சீர்திருத்தம் செய்தல்.

**3. நிலத்தடி சோதனை**

சல்லியம் கண்டுபிடித்தல் - பிரச்னம் - சகுனம் - நிமித்தம் - நட்சத்திரம் - வாயிலாகச் சல்லியம் கண்டுபிடித்தல் - நீக்குதல் - கஜ பிருஷ்டம் - கூர்ம பிருஷ்டம் - தைத்ய பிருஷ்டம் - நாக பிருஷ்டம்.

**4. நிலத்தை அளத்தல் ஆயம் கணித்தல்**

அங்குல அளவு - கை அளவு - பொதுவான அளவு முறைகள் - ஆயம் கணித்தல் - பலன் - பார்வை – கதவு நிலம் அதிபதி – கால்நடைகள் - ஒன்பது வர்க்கம் கணக்கிடுதல் - திசைகளை நிர்ணயித்தல் - வீடு கட்டத் தகுதியான பாகங்கள்

**5. கட்டுமானம்**

வீடு – உயரம் - தலைவாசல் - ஒற்றை அறை - இரட்டை அறை – பதினாறு வகையான கட்டுமானம் - நிலத்தின் தோஷம் - திசை – மரம் - அஸ்திவாரம் - கதவு - சன்னல் - மனையடி சாஸ்திரம்.

**குறிப்புதவி நூல்கள்**


1. கே.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரிகள், மய மதம், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்
2. உரை எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், வாஸ்து வித்யை, சரசுவதி மகால் நூலகம்
   தஞ்சாவூர்
3. கோவிந்தசாமி ரெட்டியார், காக்கையர் சிற்பம், சண்முகனந்தா புக் டிப்போ, சென்னை
4. ஆர். பாஸ்கரன் குருஷி, _ காச புஜண்டர் சித்தர் வாஸ்து சாஸ்திரம், காஞ்சிபுரம்
5. என். தாமோதரன், வாஸ்து வளம், _ மீனா பப்ளிஷர்ஸ், திருச்சி
6. பல வகையான சோதிட இணைய தளங்கள்

16ASP105 (C) Samutrika Lakshanam Semester – I
4H – 4C

Instruction Hours / Week: L : 4 T : 0 P : 0 Marks Internal : 40, External : 60 Total : 100
End Semester Exam : 3 hrs

**நோக்கங்கள்**

1) பொதுவான முகத்தின் லட்சணத்தை கொண்டு ஜாதகரின் குணாதிசயங்களை சொல்ல முடியும்.
2) ஜோதிடத்திற்கும் அங்கலட்சணத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஒரு மனிதனை பார்த்து அவனுடைய ஜாதக கட்டங்களை எழுதுகின்ற அளவிற்கு அறிவை வளர்க்க முடியம்.
3) உடலின் வலிமை, நிறம், உயரம், மச்சங்களின் பலன்கள் அந்த ஜாதகரின் வாழ்கையில் நடக்கும் நிகழ்ச்சிகளை தெரிவிக்கும்.
4) ஒருவரை பார்த்த மாத்திரத்தில் அவருடைய குணங்களை சொல்வது நோக்கமாகும்.
5) சமுதாயத்தில் எச்சரிக்கை உணர்வோடு வாழ்வது.
6) நம்மை பற்றிய, மற்றவர்கள் பற்றிய எதிர்கால பலன்களை தெரிந்துக் கொள்வது.

**பயன்கள்:**

1) ஒரு மனிதனை பார்த்த மாத்திரத்தில் அவனுடைய குணம், இறந்த கால வாழ்க்கை, நிகழ்கால வாழ்க்கை எதிர்கால வாழ்க்கை பற்றி தெரிந்துக் கொள்ளலாம்.
2) மனித உடலின் அங்கங்களின் வடிவம், அமைப்பு, நிறம், அளவு, தன்மை முதலியவற்றை தெளிவாக புரிந்துக் கொண்டால் அம்மனிதனை பற்றிய அனைத்து மறைக்கப்பட்ட உண்மைகளையும் நம்மால் சொல்ல முடியும்.
3) மனிதர்கள் மட்டும் இன்றி வளர்ப்பு பிராணிகளுக்கு அங்கலட்சனம் பார்க்கப்பட்டன. அவைகள் எஜமானனுக்கு எவ்வகையில் உதவும் என்பதும் சொல்ல முடியும்.
4) ஒரு மனிதனின் ஆயுள் ஆரோக்யத்தை சொல்ல முடியும்.
5) திருமண வாழ்க்கையை புரிந்துக் கொள்ளலாம்.
6) வேலை, தொழில் அமைப்பு, புத்ர பாக்யங்களை தெரிந்துக் கொள்ளலாம்.

**UNITS**

**1. பொதுவான முக லட்சணம்**

மூக்கின் லட்சணங்கள் - வாயின் லட்சணங்கள் - உதடுகளின் லட்சணம் - பற்களின் லட்சணங்கள் - காதுகளின் அமைப்பு.

**2. அங்கத்துடிப்புகள்**

நாக்கின் லட்சணங்கள் - காதுகளின் அமைப்பு. கன்னங்கள் - சிரிப்பும் அழுகையும் - முகவாய்க்கட்டு – கழுத்தின் லட்சணங்கள்.

**3. தலை முடியின் லட்சணம்**

தாடி மீசைகளின் லட்சணங்கள் - முதுகின் லட்சணங்கள் - தோள்களின் லட்சணங்கள் கைகளின் லட்சணங்கள் - மணிக் கட்டுகள் உள்ளங்கைகள் - புறங்கைகள்.

**4. நெற்றியின் லட்சணம், கண்களின் லட்சணங்கள்**

கைரேகை லட்சணங்கள் - விரல்கள் லட்சணங்கள் - நகங்களின் லட்சணங்கள் - இடும்பும் வயிறும் - தொடைகளின் லட்சணங்கள் - ஆண்குறியும் விதைகளும் - கால்களின் லட்சணங்கள் - கணுக்கால்கள்.

**5. உடல் மச்சங்களும் பலன்களும் , மச்சங்களின் வடிவ லட்சணங்களும் பலன்களும்**

சாமுதிரிகா லட்சணமும் ஜோதிடவியல் சம்பந்தமும் - மச்சங்களின் வகைகள் - ராசி சக்கரத்தை கொண்டு மச்சகளின் இருப்பிடத்தை நிர்ணயித்தல்.

**குறிப்புதவி நூல்கள்**


1. **C.M.Srivastava, Samudrik shastra, Manoj publications**
2. **K.C. Sen, Hast samudrika shastra, D.B. Taraporevala sons**
3. **கே.என். சரஸ்வதி, பிருஹத் ஸம்ஹிதை, கடலங்குடி பப்ளிகேஷன்ஸ்**

| 16ASP111 | Predictive methods in Astrology - 1 | Semester – I<br>4H – 4C |
|---|---|---|
| Instruction Hours / Week: L : 0 T : 0 P : 4 | Marks Internal : 40, External : 60 Total : 100<br>End Semester Exam : 3 hrs | |

**நோக்கங்கள் :**

1) பல்வேறு சிறப்பு லக்னங்களை கொண்டு பலன் சொல்லும் முறைகள் இங்கே செய்முறை பயிற்சியின் மூலம் தெளிவாகிறது.
2) நாம் சொல்லும் பலன்கள் எக்கால கட்டங்களில் நடக்கும் என்பதை தசாபுத்தி கோட்சார அடிப்படையில் கால நிர்ணயம் செய்வதை இப்பாடப்பகுதி தூண்டும்.
3) பல்வேறு முறைகளில் பலன் சொல்வது நோக்கமாகும்.
4) ஜாதகம் இல்லாதவர்களுக்கு பலன்கள் சொல்வது.
5) இன்றைய ஜோதிட வளர்ச்சியை, புதிய கண்டுபிடிப்புகளை ஏற்றுக் கொள்வது.
6) ஜெய்மினி முறையில் பலன்கள் கண்டுபிடிப்பது.

**பலன்கள் :**

1) பலன்கள் கூறுவதற்கு பல முறைகள் உண்டு என்பதை தெரிந்துக் கொண்டு அவைகளை பயன்படுத்தி பார்ப்பது இங்கே அனுபவத்தை அதிகரிக்கும்.
2) அஷ்ட வர்க்க முறையிலும், ஷட்பல முறையிலும், எண்கணித முறையிலும் பலன்களை சொல்லுவதற்கு நம்மால் முடியும்.
3) ஏதேனும் ஒரு முறையில் நாம் சொல்லும் பலன்களை வேறுமுறையில் சோதித்து அறியலாம்.
4) நமக்கு தெரிந்த முறையில் பலன் கூறி பழகலாம்.
5) எந்த முறையில் பலன் கூறினாலும் பலன் ஒன்றாக தான் இருக்கும் என்பதை நிருப்பிக்கலாம்.
6) எளிமையான முறையில் பலன்கள் நிர்ணயம் செய்யலாம்.

**UNITS**

**1.** லக்ன பலன் கூறுதல்
பல்வேறு சிறப்பு லக்னங்களைக் கொண்டு பலன் சொல்லுதல் - கேந்திர திரிகோண அதிபதிகளின் தொடர்புகளைக் கொண்டு பலன் சொல்லுதல்.

2. தசாபுத்தி - கோட்சார முறைகளைப் பயன்படுத்தி பலன் கூறல்.
தசாக்கோள் - புத்திகோள் நிலைகள் - நின்ற நட்சத்திரம் - கோட்சார சனி – குரு நிலைகளைக் கொண்டு பலன் கூறுதல்

3. எண்கணித முறையில் பலன் கூறுதல் - பிறப்பு எண் - விதி எண் அடிப்படையில் பலன்கள் கூறுதல்.

4. அஷ்டவர்க்க முறையில் பலன் கூறுதல் - நவகிரக அஷ்டவர்க பலன்கள் - நவகிரக கச்சயா பலன்கள்.

5. ஷட்பலம் முறையில் பலன் கூறுதல் - நவகிரகங்களின் பலம் பலஹீனத்தை கொண்டு பலன் கூறுதல்.

**குறிப்புதவி நூல்கள்**


| | | |
|---|---|---|
| 1. | பிருஹத் பராசர ஹோரா சாஸ்திரம் | G.C.Sharma |
| 2. | பஞ்ச பட்சி | புலிப்பாணி சுந்தரவரதாச்சாரியார் |
| 3. | Bhirugu Nandi Nadi | R.G.Rao |
| 4. | Predictive steller Astrology | K.S.Krishnamurthi |
| 5. | ஜோதிடத்தில் பலன் கூறும் முறைகளும் கோட்சார சூட்சுமங்களும் | நக்கீரர் எஸ். நடராசன் |
| 6. | சாதகாலங்காரம் | கீரனூர் நடராசன் |
| 7. | குமாரசாமியம் | ஶ்ரீகுமாரசுவாமி |
| 8. | ஸர்வார்த்த சிந்தாமணி | கடலங்குடி நடேச சாஸ்திரிகள் |
| 9. | மேலைநாட்டு சோதிடர்கள் சொல்லும் ஜோதிடம் | எஸ்.பி. சுப்ரமணியன் |
| 10. | How to predict your future (1995) | James Braha |
| **11.** | பஞ்ச பட்சி சாத்திரம் | ஜாண் பி.நாயகம் |

| 16ASP112 | Practical - I | Semester – I<br>4H – 4C |
| --- | --- | --- |

Instruction Hours / Week: L : 0 T : 0 P : 4 Marks Internal : 40, External : 60 Total : 100
End Semester Exam : 3 hrs

**நோக்கங்கள்:**

1) தாரா பலனை நிர்ணயிப்பதின் மூலம் ஜாதகத்தின் பலனை மிகவும் துல்லியமாக கூற முடியும்.
2) சிறுவயது ஜாதகர்களின் எதிர்கால படிப்பை பற்றிய தெளிவு நன்கு புலனாகும்.
3) திருமண வாழ்க்கையின் தாரதரத்தை நிர்ணயிக்க முடியும்.
4) ஒரு லக்னம்(அ) சந்திரன் நின்ற ராசிக்கு கேந்திர திருகோண அதிபதிகளின் நிலை கொண்டு பலன்கள் கூறலாம்.
5) கோள்களின் பலத்தை அறிந்துக் கொள்ள திக்பலம் பயன்படும்.
6) பல்வேறு முறைகளில் பலன் சொல்வது நோக்கமாகும்.

**பயன்கள்**

1) நிலம், நீர்,நெருப்பு இராசிகளை இராசி கட்டங்களில் பிரித்து அறிவதன் மூலம் பலன் சொல்லும் முறையில் பல அரிய விஷயங்களை வெளி கொண்டுவர முடியும்.
2) ஷட் பலங்களில் திக் பலத்தின் முக்கியத்துவம் புரியும்.
3) கோள்கள் நிற்கும் நட்சத்திரத்தை கொண்டு தாரா பலன்கள் நிர்ணயித்து கோள்களின் வலிமையை அறியலாம்.
4) மனிதர்களுக்கு மிக இன்றியமையாதது கல்வியும், திருமண வாழ்க்கையும், தொழிலும் ஆகும். இவைகளை இந்த செய்முறை பாட பகுதியின் மூலம் நன்கு அறிந்தும் கொள்ளலாம்.
5) எந்த முறையில் பலன் கூறினாலும் பலன் ஒன்றாக தான் இருக்கும் என்பதை நிருப்பிக்கலாம்.
6) எளிமையான முறையில் பலன்கள் நிர்ணயம் செய்யலாம்.

**UNITS**

1. தாரா பலனை வரையறுத்தல் - ஜென்மதாரை – சம்பத் தாரை – விபத் தாரை –சௌம்ய தாரை- பிரத்வர தாரை – சாதக தாரை – நைதன தாரை – மைத்ர தாரை.
2. கல்வி பலனை வரையறுத்தல் - பள்ளி கல்வி – கல்லூரி படிப்பு – மேற்படிப்பு- ஆராய்ச்சி படிப்பு- மருத்துவபடிப்பு – பொறியியல் படிப்பு.
3. வாழ்க்கை முறையும் குடும்ப நலனும் - குடும்ப வாழ்க்கை அமையும்முறை – பணம் வரும் முறை.
4. நிலம், நீர், நெருப்பு, காற்று, இராசிகளை இராசிக்கட்டத்தில் பிரித்து காட்டுதல் - தன்மைகள்.
5. கேந்திர கோண ராசிகளின் பலன்களை வரையறுத்தல் - 1,4.7.10 ராசிகள். 5.9 ராசிகள் இவைகள் இணைந்த பலன்கள்.

**குறிப்புதவி நூல்கள்**

1.My Experiences in Astrology B.V. Raman

2. Important Combinations B.V. Raman

3. Hindu predictive Astrology B.V. Raman

16ASP201 Fundamentals of Astrology – 1I Semester – II
4H – 4C

Instruction Hours / Week: L : 4 T : 0 P : 0 Marks Internal : 40, External : 60 Total : 100
End Semester Exam : 3 hrs

**நோக்கங்கள் :**

1) தமிழ் இலக்கியங்களில் உள்ள ஜோதிட குறிப்புக்கள் ஜாதக அலங்காரம், குமாரசுவாமியும், புலிப்பாணி 300, நாடி ஜோதிட நூல்கள் முதலிய நூல்களை பற்றி தெரிந்துக் கொள்வதால் தமிழகத்தில் ஜோதிடவியலின் ஆழத்தை பிரிந்துக் கொள்ள முடியும்.
2) பராசரர், ஜெயமினி, பிருகு முதலிய ரிஷிகளின் ஜோதிட கொள்கைகளை பற்றி அறிந்துக் கொள்வது மாணவர்களின் அறிவை வளர்ச்சியடைய செய்யும்.
3) கிருஷ்ணமூர்த்தி பத்ததி அவர்களின் புதிய ஜோதிட முறையின் மூலம் துல்லியமான பலன்களை கூறலாம்.
4) கல்யாணவர்மா, ஸ்ரீபதி, வராகமிஹிரர் போன்ற வடமொழியில் ஜோதிட நூற்கள் எழுதியவர்களின் ஜோதிட புலமைகளை அறிவது.
5) சி.ஜி. ராஜன் போன்ற தமிழக ஜோதிடர்களின் புலமைகளை அறிவது.
6) பி.வி.ராமன் போன்றவர்களின் அனுபவ ஜோதிட அறிவை புரிந்துக் கொள்வது.

**பலன்கள்:**

1) கல்யாணவர்மா, ஸ்ரீபதி, வராகமிஹிரர் ஆகிய ஜோதிட மேதைகளின் ஜோதிட நூற்களை படிப்பதன் மூலம் ஜோதிடத்தில் ஆழ்ந்த அறிவு உண்டாகும்.
2) ஜெயமினி, பராசரர் முதலிய ரிஷிகளின் ஜோதிடவியல் பங்களிப்புகள் ஜோதிடவியலின் தெய்வீக தன்மையையும், நம்பக தன்மையையும் அதிகப்படுத்துகின்றன.
3) நாஸ்டர்டாம், அகஸ்தியர் முதலிய ஜோதிட மேதைகளின் பலன் கூறும் முறைகள் இன்றளவிலும் ஒரு ஆச்சர்யமாகவே பார்க்கப்படுகின்றன.
4) கர்கர், பிருகு போன்ற ரிஷிகளின ஜோதிட அறிவை அவர்களின் நூற்களின் மூலம் அறிந்துக் கொள்ள முடியும்.
5) சாதக சந்திரிகை போன்ற பழம் பெரும் நூற்களின் பெருமைகள் புரியும்.
6) ஜோதிட வல்லுனர்களின் ஜோதிட புலமை என்பது மாணவர்களுக்கு ஒரு வரபிரசாதமாக அமையும்.

**UNITS**

1. **தமிழ்ச் சோதிட நூல்கள்**
பழந்தமிழ் இலக்கியங்களில் ஜோதிட குறிப்புக்கள் - சாதக அலங்காரம்- குமாரசுவாமியம்- புலிப்பாணி 300 - நாடிஜோதிட நூல்கள் - ப்ருகு நந்தி நாடி- சப்த ரிஷி நாடி –ஜினேந்திர மாலை- ஜோதிடப் பேரகராதி – ஜாதக சூடாமணி- சந்திரகாவியம்.

2. **இந்திய ஜோதிடர்களின் சோதிடக் கொள்கைகள்**
பராசரர் - ஜெயமினி – கர்கர் - பிருகு – சாதக சந்திரிகை – பராசர ஹோரா சாஸ்த்ரம் - ஜெயமினி சூத்திரங்கள் - கர்க ஹோரை – பிருகு சம்ஹிதை – நந்திவாக்யம்.

3. **கல்யாணவர்மர் - ஸ்ரீபதி – வராகமிஹிரர்**- சாராவளி – சுகர்நாடி – சர்வார்த்த சிந்தாமணி - ஜாதக பாரி ஜாதகம் - சித்தாந்த திருக்கணிதம்.

**4.** **தற்கால ஜோதிடவளர்ச்சி**
கிருஷ்ணமூர்த்தி பத்ததி – பி.வி. ராமன் - கிருஷ்ணமூர்த்தி பத்ததி நூற்கள் - பிஇவி.ராமன் நூற்கள்.

5. **சி.ஜி. ராஜன் நூற்கள்** - இந்தியா – ரஷ்யா – அமெரிக்கா பற்றிய நாஸ்டர்டாம் கூற்றுக்கள்.

**குறிப்புதவி நூல்கள்**


| | | |
|---|---|---|
| 1. | Hindu Astrology and the west | B.V.Raman. |
| 2. | கிருக்ஷ்ணமூர்த்தி பத்ததி முறை | கே.எஸ். கிருஷ்ணமூர்த்தி |
| 3. | வான சாஸ்திரம் | எம். எல். ராஜா. |
| 4. | வானியலும் ஜோதிடமும் | எம். கே. தாமோதரன் |
| 5. | Ancient Hindu Astrology for the Modern Western Astrologer (1986) | James T.Brahe |
| 6. | Tryst with Astronomy | V.Jayabal<br>சோதிட ஆய்வு திரட்டு -1(2013)<br>கற்பகம் பல்கலைக்கழகம்<br>கோயம்புத்தூர் |

| 16ASP202 | Planets in Astrology – 1I | Semester – II<br>4H – 4C |
|---|---|---|

Instruction Hours / Week: L : 4 T : 0 P : 0 Marks Internal : 40, External : 60 Total : 100
End Semester Exam : 3 hrs

**நோக்கங்கள் :**

1) பன்னிரு ராசிகளில் கோள்கள் அடையும் ஆட்சி, உச்சம், நீச்சம், பகை, மூலத்திரிகோணம் ஆகிய பலன்கள் கோள்களின் பலத்தை அறிவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.
2) பாவகத்தில் கோள்கள் நின்ற பலன்களும் ஜாதகத்திற்கு பலன் சொல்வதற்கு துணையாக இருக்கும்.
3) கோள்களின் இணைவு பலன்கள் ஜாதகபலன் நிர்ணயத்திற்கு பெரும் பங்காற்றுகின்றது.
4) திசா புத்தி கோட்சார பலன்கள் நிகழ்ச்சிகள் நடக்கும் காலகட்டத்தை துல்லியமாக எடுத்துரைப்பதாகும்.

**பயன்கள் :**

1) கோள்களின் பார்வைகள், சிறப்பு பார்வைகள் ஜாதகரின் வாழ்க்கையில் எப்படிப் பட்ட தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை தெரிந்துக் கொள்ள முடியும்.
2) கோள்களின் வலிமையை கொண்டு அக்கோள் ஜாதகருக்கு எவ்வளவு பலனை தரும் என்பதை கணிக்கலாம்.
3) பாவகங்களில் நிற்கும் கோள்களின் தன்மைகளுக்கு ஏற்ற வகையில் ஜாதகனின் வாழ்க்கை அமைகிறது.
4) தர்ம, அர்த்த, காம, மோட்ச திரிகோணங்களில் நிற்கும் கிரகங்களை கொண்டு ஜாதகனின் பிறவியின் நோக்கம் தெரிந்துக் கொள்ளலாம்

## UNITS

**1. கோள்களின் பலன்கள்**

ஆட்சி, உச்சம், நீசம், திரிகோணம், கேந்திரம் வர்க்கப்பலன்கள் - பன்னிரு ராசிகளில் கோள்கள் அடையும் ஆட்சி – உச்ச- நீச- பகை- மூலத்திரிகோண பலன்கள்

2. **பாவகத்தில் கோள்களின் பலன்கள்**

தர்ம - அர்த்த - காம்ய - மோட்ச - கேந்திர - கோண பலன்கள் - நட்சத்திரங்களின் கோள்கள் நின்ற பலன்கள்.

**3. கோள்களின் பார்வை பலன்கள் மற்றும் கோட்சார பலன்கள்**

கோள்களின் பொதுப் பார்வைகள் - சிறப்பு பார்வைகள் குரு – சனி – செவ்வாய் - ராகு - கேதுக்களின் பார்வைகள் - கோள்களின் கோட்சாரப் பலன்கள்.

**4. கோள்கள் இணைவு பலன்கள்**

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கோள்கள் இணைதல் மற்றும் பலன்கள்- யோகி கோள் - அவயோகி கோள்.

5. **கோள்களின் திசா புத்தி பலன்கள்**

போதகர் - காரகன் - பாசகன் - வேதகன்.

**குறிப்புதவி நூல்கள்**


| | | |
|---|---|---|
| 1. | உத்திரகாலாமிருதம் | S.A.குமாரஸ்வாமி ஆச்சாரியார். |
| 2. | Prasana Marga | B.V.Raman |
| 3. | Pointer to Profession | T.P.Trivedi & R.Asthana |
| 4. | Brihat Parasara Hora Sastra | G.C.Sharma |
| 5. | ப்ருஹத் ஜாதகம் | C.G. ராஜன் |
| 6. | குடும்பஜோதிடம் | ஸ்ரீராமய்யங்கார்-ஸ்ரீஸ்ரீனிவாஸாசாரியார் |
| 7. | Mundane Astrology | B.V.Raman |
| 8. | ஜோதிடமும் நவகிரகங்களும் | முருகு இராசேந்திரன் |
| 9. | How to Judge a Horoscope – Vol –I & II | B.V. Raman |

16ASP203 Horary Astrological Methods – 1I Semester – II
4H – 4C

Instruction Hours / Week: L : 4 T : 0 P : 0 Marks Internal : 40, External : 60 Total : 100
End Semester Exam : 3 hrs

**நோக்கங்கள்**

1) கேள்வியாளர்களின் தூரப் பயணங்களை பற்றியும், தனது தொழிலில் ஏற்படும் ஏற்ற தாழ்வுகள் பற்றியும் பிரஸன்ன முறையில் பலன்கள் கூறப்படும்.
2) புத்திர பேறு அறிதல் பற்றிய கேள்விகளுக்கு பிரஸன்ன முறையில் பதில்கள் சொல்வதற்கு பயிற்ச்சியளித்தல்.
3) விவாஹ பிரஸன்ன முறையில் திருமணத்தை பற்றிய அனைத்து கேள்விகளுக்கும் பதில் கூற முடியும்.
4) ரோக பிரஸன்ன முறையில் ஜாதகருக்கு ஏற்பட்ட நோயை அறிந்து அதற்கு பரிகாரமும் சொல்ல முடியும்.
5) சகுனம், நிமித்தங்களின் மூலம் ஜாதகரின் கேள்விகளும் பதில் கூற முடியும்.
6) வெற்றிலை ஜோதிடம் மூலம் ஜாதகரின் கடந்த காலம், நிகழ்கால பலன்களை தெளிவாக கூற முடியும்.

**பயன்கள் :**

1) ஜாதகம் இல்லாதவர்களும் ஜோதிடத்தின் மூலம் பலன்களும் பரிகாரங்களும் தெரிந்துக் கொள்ளலாம்.
2) நிகழ் காலத்தில் ஏற்படுகின்ற தொழில் தடை, திருமண தடை முதலியவைகளை முன்கூட்டியே அறிந்து அவைகளுக்கு தீர்வும் அளிக்கலாம்.
3) குழந்தை ஆணா? பெண்ணா? எக்கால கட்டத்தில் பிறக்கும், அக்குழந்தையால் பெற்றோர்களில் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவை தெரிவுப்படுத்தப்படும்.
4) நோய் வருவதற்கு காரணம், அதை தீர்க்கும் முறையும் சொல்லப்படும்.
5) அஷ்ட மங்கல பிரசன்னம் மூலம் கேள்வியாளர் பிரச்சினைகளை எளிதாக கண்டு பிடிக்க முடியும்.
6) விவாஹ பிரசன்னம், நஷ்ட பிரசன்னம், ஆயுள் பிரசன்னம், ரோக பிரசன்னம் மூலம் கேள்வியாளரின் கேள்விகளுக்கு பதில்கள் கூற முடியும்.

